# தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடுகள் ஏற்பாடு

கோலாலம்பூர், பிப். 15-

செராசில் உள்ள ஸ்ரீ சபா பி.பி.ஆர். அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் வீடுகளை இழந்த ஐந்து குடும்பங்களுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டி.பி.கே.எல்.) தற்காலிக வீடுகளை வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா இதனை தெரிவித்துள்ளார். சேதமடைந்த வீடுகளைச் சேர்ந்தவர்கள் ஆறு மாதங்களுக்கு தற்காலிக வீடுகளில் தங்க அனுமதிக்கப்படுவர். அதே சமயம், வாடகை வீடுகளில் மூன்று ஆண்டுகள் வரை தங்கலாம் என்று அவர் கூறினார்.

சேதமடைந்த வீடுகள் பழுது பார்க்கப்படும். தற்போது தற்காலிக நிவாரண மையத்தில் 16 பேர் கொண்ட ஐந்து குடும்பங்கள் தங்கியுள்ளன.

இதுபோன்ற அடுக்குமாடி குடியிருப்புகளில் தீயணைப்புக் கருவிகள் உட்பட பொது சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என ஸலிஹா நினைவூட்டினார். ஆபத்து அவசர வேளைகளில் இதனால் பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் கூறினார்.